**தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு - 2024**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட கீழே காட்டப்பட்ட பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1. (அ) (ii) | சுற்றாடல் அமைச்சின் பராமரித்துச் செல்லப்படுகின்ற இயற்கை நிலையம் கட்டிடம் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக கையேடுப்பதற்கும் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 261,000,000 ஐ நிதி கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல். | 1.6.1.(அ)(i) |
| 1.6.1. (ஆ) | அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லா சொத்துக்களின் பெறுமதியில் 2023 நவம்பர் 09 ஆம் திகதி கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்த வாகனம் ஒன்றும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேறு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 10 வாகனங்களுக்குரிய ரூபா 27,790,000 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது | 1.6.1. (அ) (ii) (iii) |

## 1.6. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்வது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சுற்றாடல் அமைச்சு அமைந்துள்ள சௌபாதம் இல்ல கட்டிடம் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 261,000,000 நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் நிதி கூற்றில் வெளிப்படுத்து வதற்கும் காணியை சட்டரீதியாக கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி சட்டரீதியாகக் கையேற்கப்பட்டதன் பின்னர் காணியின் மதிப்பீட்டு பெறுமதியை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அமைச்சு அமைந்துள்ள கட்டிடம் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக கையேற்பதற்கும் காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீட்டு பெறுமதியை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அமைச்சினால் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட ஜீப் வண்டியின் பெறுமதியான ரூபா 3,000,000 தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சட்ட ரீதியாகக் கையளிக்கப்பட்ட பின்னர் நிதி அல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். |
| (iii) | உமா ஓய கீழ் பகுதி அபிவிருத்தித் திட்டத்திற்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த 09 வாகனங்கள் சுற்றாடல் அமைச்சினால் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சுக்கு சட்டரீதியாகக் கையளிப்பதற்கு உரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் தற்போது அமைச்சு பயன்படுத்தாத மேற்படி 09 வாகனங்களுக்குரிய ரூபா 16,800,000 தொகையான பெறுமதியும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | இது வரை சட்டரீதியாக கையளிக்கப்படாது இருந்ததுடன் சட்டரீதியாகக் கையளிக்கப்பட்டதன் பின்னர் நிதி அல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கையளிக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டு கணக்கேடுகளை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதி அல்லாத சொத்துக்களில் சொத்துக்கள் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | வனசிவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சுக்கு 2020 செப்டம்பர் 21 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த கெப் வண்டி ஒன்றின் பெறுமதி ரூபா .7,990,000 தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதி அல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு இருந்தது | சட்டரீதியாக கையேற்றதன் பின்னர் நிதி அல்லா சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ரீதியான கையயேற்றல் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொண்டு சொத்துக்கள் முறையாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (v) | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் பெயரில் காணப்படும் 02 வாகனங்கள் தற்போது சுற்றாடல் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற போதும் அவ் வாகனங்களின் உரித்தை சுற்றாடல் அமைச்சின் பெயருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தத்துடன் அதற்குரிய ரூபா 9,900,000 ஆன பெறுமதி 2024 திசெம்பர் 31 உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் பெறுமதியில் உள்ளடக்கப்பதற்கும் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மோட்டார் வாகனத்தை கையேற்பதற்காக இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு அரச பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ஜீப் வண்டியின் பதிவு உரித்தைக் கையளிப்பதற்காக எம்.டீ.ஏ 6 படிவம் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்குமாறு கொணம்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் அந்த படிவம் பூர்த்தி செய்யப்பட்டு கொம்ப்றோரலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | சட்டரீதியாக கையேற்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி சொத்துக்களை உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vi) | தற்போது சுற்றாடல் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 2,500,000 பெறுமதியான வாகனம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்படாத இருந்ததாக அவதானிக்கப்பட்டது | சட்டரீதியாக கையேற்க்கப் பட்டதன் பின்னர் நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சட்ட ரீதியாக கையேடுக்கும் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி சொத்துக்களை உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டுக்காக 8 செலவின விடயங்களுக்காக கிடைத்த ரூபா 10,700,000 ஆன நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் பதவியணியினர் அலுவலகத்தினால் கோரல்கள் மேற்கொள்ளாமை, அமைச்சின் பதவியணி இல்லாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை உள்ளூராட்சி மன்றங்களால் வீதவரிக்காக கட்டணங்கள் கோராமை திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட முடியாமை எதிர்பார்த்த பிரகாரம் மூலதன சொத்துக்களை புணரமைப்பதற்கும் திருத்துவதற்கும் தேவைப்படாமை சேமிப்புக்கு காரணங்களாக இருந்தன | தேவைப்பாட்டுக்கு இணங்கும் வகையில் மாத்திரம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும் |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு<br>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப் பிரமாண கோவை<br>நிதி பிரமாணம் 104(1) (3) மற்றும் நிதி பிரமாணம் 104 (1) (4) | | 2024 ஒக்தோபர் 4 ஆம் தேதி விபத்துக்குட்பட்ட வேன் வண்டி தொடர்பாக இடம்பெற்ற ஆரம்ப அறிக்கை 2025 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு | வேன் வண்டியின் விபத்து தொடர்பாக நி.பி 104(3) இன் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கை இதுவரை வழங்கப்பட வில்லை. ஒரு மோட்டார் | நிதி பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சுக்கு சொந்தமான 02 மோட்டார் வண்டிகள் தொடர்பாக பூரண அறிக்கை வழங்குவதற்கு முறையே 02 மாதங்கள் மற்றும் 02 ஆண்டுகள் 10 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்தன வைப் . | வண்டிக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக புலனாய்வு குழுவின் உத்தியோகத்தரின் கடமை சுமையால் பூரண அறிக்கை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் மற்றைய வண்டியின் திருத்தத்திற்காக குறித்த மதிப்பீடு 2022.12.06 ஆந் திகதி காப்புறுதி கம்பெனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவு அளவு செய்யப்பட்ட தொகை 2023.07.25 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளதால் புலனாய்வு அறிக்கை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 செப்தம்பர் 10 ஆம் திகதிய அமப/ /24/1711/622/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நிர்மான கைத்தொழில்காக பயன்படுத்தப்படுகின்ற கனிய அகழ்வு போக்குவரத்து மற்றும் வியாபாரம் தொடர்பாக செயற்பாட்டு கோவையில் அத்தியாய இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதன் கட்டண முறைமை செயல்படுத்துதல் 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல் 2 ஆண்டு காலப் பகுதிக்காக தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருந்ததுடன் அந்த அமைச்சரவை தீர்மானத்தின் 3.2 இன் பிரகாரம் கட்டண முறைமையை செயற்படுத்த வேண்டிய காலப்பகுதியில் பணத்தை அறவிடுவதில் உள்ள சிக்கல்களை | ஒருங்கிணைந்த கட்டண முறையின் கீழ், நிர்மாண் துறையில் பயன்படுத்தப்படும் கனிமங்களை வெட்டியெடுத்தல், போக்குவரத்து மற்றும் வியாபாரம் செய்வதற்கான கட்டணங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்களால் நேரடியாக சுற்றாடல் அமைச்சகத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படுகின்றன. புவியியல் எசரிதவியல் சுரங்க அகழ்வு பணியகத்தின் மூலம், அக் கட்டணங்களை வழங்கப்பட வேண்டிய நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய பற்றுச்சீட்டுகளை ஆராய்ந்து, சுற்றாடல் அமைச்சிற்கு அறிவித்து, | உருவாகிய சில சிக்கல்கள தீர்வு செய்து நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| சரியாக்குதல் தவறு நிலைமை தொடர்பாக முடியுமானவரை நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது எனினும் சுற்றாடல் அமைச்சின் பொது வைப்பு கணக்கில் 2023 திசெம்பர் 30 மற்றும் 2024 செப்டம்பர் 24 ஆந் திகதிகளில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 5,452,224 ஆன மீதியொன்று 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. மேலும் கட்டண முறைமையின் கீழ் நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து 2004 ஆம் ஆண்டுக்குரிய கட்டணமாக கிடைத்திருந்த ரூபா 1,365,923 தொகை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திற்கு வழங்குவதற்காக அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டிருந்த போதும் அத்தொகையை 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | அதற்கேற்ப பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.அதன் போது உருவாகிய சில சிக்கல்கள் காரணமாக பணம் செலுத்த முடியாததால், எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டு தொடர்புடைய நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்படும். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலநிலை நிலை மாற்றத்தை குறைக்கும் செயற்பாட்டு ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்து செயறபடுத்துவதற்கு முன்மொழியப்பட்ட தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவு பரிமாற்ற வலையமைப்பு முறைமையை நிறுவுவதற்காகவும் (NCC-DSN) உபகரணங்கள் கொள்வனவுக் காகவும் ரூபா 46,371,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2025 | சுற்றாடல் அமைச்சினால் இணையத்தை அடிப்படையாக தேசிய காலநிலை மாற்ற தரவு பரிமாற்ற வலையமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு அதற்கு ஒத்துழைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு டெஸ்க் டொப் கணினி வழங்கப்பட்டதுடன் மேற்படி செயற்பாட்டை நிறைவேற்றும் போது புதிதாக உருவாக்கப்படுகின்ற தொழில்நுட்ப சவால்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இயலுமையை | தரவு முறைமையை நிறுவுவதற்காக தெரிவு செய்யப்பட்ட கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இந்த |

| | | |
|---|---|---|
| மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் முறைமை எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற கூடிய வகையில் செயல்படுத்தக்கூடிய நிலைமையில் இல்லாமல் இருந்ததாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த கணக்காய்வு அறிக்கை மூலமும் சுட்டிக் காட்டிக்கப்பட்டிருந்ததுடன் 2021 நவம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது இச்செயற் திட்டத்தின் முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இல்லை என்பதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குறித்து பிரிவுடன் முறையான தொடர்பு ஒன்றை தொடர்பு ஒன்றினை ஏற்படுத்திய தரவு முறைமையை நாளதுவரையாக்கும் நடைமுறை ஒன்று காணப்பட வேண்டிய எனவும் இம்முறைமை தொடர்ந்தும் பின் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இருந்தது | கட்டியெழுப்பதற்கு சவால்களுக்கு முகம் கொடுத்ததுடன் அதன் விளைவாக NCC-DSN தற்காலிகமாக செயற்பாடற்றிருந்தது. அதற்காக இரண்டாவது NDA Readiness செயற்திட்டத்தின் நிதி பங்களிப்பு பேரில் தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனம் ஒன்றினால் தரப்பினர் நிறுவனங்களுக்காக செயலமர்வு தொடர் ஒன்றும் முறைமை மதிப்பீடு ஒன்றும் 2024 திசெம்பர் 25 ஆம் திகதி அளவில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாறே தரப்பினர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட தரவுகள் தொடர்பாக புதிய கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தரவுகளை வழங்குவதற்கு சிக்கலான நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அத்தரவுகள் தொடர்பாக கலந்துரையாடல்கள் அச்செயலமர்விற்கு இடையே மேற்கொள்ளப்பட்டது | செயற்திட்டம் தொடர்பாக பொது கணக்கு குழு பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்குரிய வாகனங்களை கைதவிப்பு செய்யும் குழுவின் மூலம் 2020 திசெம்பர் மாதம் வாகனம் ஒன்றை கைதவிர்ப்பதற்காக பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குழு தீர்மானத்திற்கு இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 நவம்பர் 03 ஆம் திகதி ரூபா 2,250,000 இற்கு இவ்வாகனத்தை கைதவிப்ப தற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. 2023 மார்ச் 09 ஆந் திகதி கொம்றோலர் நாயகத்தினால் | இந்த அமைச்சுக்குரிய வாகனங்களை கைதவிக்கும் குழுவின் மூலம் 2020 திசெம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் உரிய வாகனம் iii வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இவ்வண்டி கைதவிர்ப்பதற்காக தேவையான கேள்வி ஆவணங்கள் பெறுகை குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது | கைதவிர்ப்பு குழு தீர்மானம் முறையாக செயற்படுத்தப்படாமை தொடர்பாக பரீட்சித்து முறைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாகனத்தை கைதவிர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரை வாகனம் கைதவிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை 251 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிமாக அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் அமைச்சின் பெயரில் காணப்படுகின்ற பதிவு சான்றிதழ்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த அனைத்து தகவல்களின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 257 ஆக இருந்த போதும் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பௌதீக ரீதியாக காணப்படுகின்ற வாகனங்களில் எண்ணிக்கை 55 ஆகும். இந்த 55 வாகனங்களில் 03 வாகனங்கள் வேறு நிறுவனங்களால பயன்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது. எஞ்சிய 202 வாகனங்கள் அப்போதைய வரிசை அமைச்சின் கீழ் காணப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கு கையளிப்பு செய்யப்பட்டதாகவோ கைதவிர்ப்பு செய்யப்பட்டதாகவோ அல்லது காணாமல் போனதாகவோ தகவல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | சில வாகனங்கள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் அமைச்சின் விடயப்பரப்பு வேறுபடும் போது அவ்வாகனங்கள் வேறு அமைச்சுக்கு இணைக்கப்பட்டிருந்ததால் அவ் வாகனங்கள் எமது அமைச்சின் வாகன பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை அமைச்சு தற்போது 57 வாகனங்கள் மாத்திரமே அமைச்சிடம் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் ஏனைய அமைச்சிடமிருந்து விவரங்கள் பெற்றுக்கொண்டு அவ்வாகனங்களுக்குரிய அமைச்சுக்கு கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் | காணப்படுகின்ற இந்நிலைமையை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டின் போது விபத்துக்கு உட்பட்ட ஜீப்வண்டி 2023 ஆம் ஆண்டின் போது 05/2020 ஆம இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் திறந்த விலை கோரல் மூலம் அல்லது பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யும் நடைமுறை பின்பற்றப்படாமல் ரூபா 1,800,000 இற்கு கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மூலம் கிடைத்த ரூபா 1,614,105 தொகை பயன்படுத்தி திருத்தச் செலவினம் தீர்வு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 185,875 தொகையை பொதுத்திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது. இந்த ஜிப் வண்டிக்க பூரண காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளாமை காரணமாக ஜீப் வண்டியை கைதவிர்ப்புச் செய்த பணத்தில் ரூபா 1,614,105 தொகை செலவிடப்பட்டு விபத்தின் மூலம் இடம்பெற்ற நட்டத்தை தீர்வு செய்வதற்கு நேர்ந்திருந்தது. | குறித்த ஜீப் வண்டி தொடர்பாக புலனாய் வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | விபத்துக்குரிய நட்டங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | 2019 திசெம்பர் 27 ஆந் திகதி அமைச்சு செயலாளர் மற்றும் உரிய நிறுவனத்தின் மேலதிக பொது முகாமையா ளருக்கிடையே 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக | 2018 - 2023 வரையான பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக மற்றும் கொடுப்பனவு செய்வதற்குரிய பெறுகை குழு அங்கீகாரத்தை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். | பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்காக முன்அங்கீகாரம் ஒன்று முறையாக பெற்றுக் கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சௌபாதம் இல்ல கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 43,156,152 ஆன மதிப்பீட்டு கிரயத்திற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அச்செயற்பாட்டிற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2018 - 2023 வரையான பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக மற்றும் கொடுப்பனவு செய்வதற்குரிய பெறுகை குழு அங்கீகாரத்தை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.<br><br>2022.08.21 முதல் 2023.08.20 திகதி உள்ளவாறு காணப்பட்ட விலை விவரங்களுக்கு உட்பட்டு கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் 2023.08.21 ஆந் திகதி முதல் 2023.12.31 ஆந் திகதி வரை காணப்பட்ட உடன்படிக்கையை நீடிப்பதற்கும் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கும் பெறுகை குழு அங்கீகாரம் வழங்கப்பட்டது. | வேண்டும். |
| (ii) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பாவிக்காக அச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக செலுத்தப்பட்டிருந்த மொத்த சேவை கட்டணம் பெறுமதி ரூபா 27,600,848 தொகையும் 2024 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்பட்ட சேவை கட்டினங்கள் ரூபா 11,053,864, ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த 04 ஆண்டுகளுக்காக சௌபாதம் இல்ல கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த பெருமகை ரூபா 38,654,312 ஆக இருந்தது | 2024.05.07 ஆந் திகதி முதல் 2024.12.31- ஆந் திகதி வரை பெறுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு புதிய உடன்படிக்கை ஒன்றின் மூலம் கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன அதன் பிரகாரம் இக்கட்டிடத்தில் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளாக இந்த அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது | பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்காக முன்அங்கீகாரம் ஒன்று முறையாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 65 பதவிகளில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட 59 பதவிகளில் 12 வெற்றிடங்களும் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது | நிறைவேற்று மட்டத்திற்குரிய இலங்கை நிர்வாக சேவையின் விஞ்ஞான சேவையின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சானால் மேற்கொள்ளப்படுவதால் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சின் MISCO தரவு முறைமையின் ஊடாக மற்றும் எழுத்து மூலமாக அவ்வப்போது அறிவிக்கப்பட்டது இலங்கை விவசாய சேவையின் பதவிகளை அங்கீகரித்து தருமாறு இந்த அமைச்சினால் கோரப்படவில்லை அங்கீகரிக்கப்பட்ட இந்த விவசாய சேவையின் பதவிகள் மற்றும் இலங்கை பொறியியலாளர் I ஆம் தரத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் சுற்றாடல் அமைச்சின் முன்னைய பதவியணியில் இல்லாதிருந்ததால் அப் பதவிகளில் தேவைப்பாடுகள் தற்போது ஏற்படவில்லை என்பதாலும் இந்த அங்கீகாரத்தை திருத்தம் செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது | முகாமைத்துவ செயற்பாடுகளை முறையாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |